# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 15 | 29-03-2003 | சனிக்கிழமை | ஓசை 39



...ண விராக்களை மகிழ்வுடன் கொண்டாட மனதிற்கினிய ஆடைத்தெரிவுக்கு

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா

T.P:24-22879

(தி-7456)


# ஈராக்கில் தொடர்ந்து கடும் சண்டை நீடிப்பு;

# அமெரிக்கப் படைகள் இருமடங்காக அதிகரிப்பு!

## 2086 கிலோ எடையுள்ள பாரிய குண்டுகளை பாக்தாத் மீது அமெரிக்க விமானங்கள் வீசின!


(லண்டன்)

**ஈராக் மீது நேற்று ஒன்பதாவது நாளாக அமெரிக்கா - பிரிட்டன் படைகள் தொடர்ந்தும் தாக்குதலை நடத்தின. இதேவேளை, எதிர் பார்ப்பிற்கு மாறாக ஈராக் கடும் எதிர்த்தாக்குதல் நடாத்தி வருவதன் காரணமாக ஈராக் மீது அதிசக்தி வாய்ந்த குண்டுகளை அமெரிக்கப் படைகள் வீசத்தொடங்கியுள்ளதோடு, அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது.**

நேற்று இரவில் இருந்து அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் விமானங்கள் கொண்டு ஈராக் தலைநகர் பாக்தாத் மீதுதாக்கு தலைத் தீவிரமாக்கியுள்ளதாகவும் இதனால் பாக்தாத் நகரம் அதிர்ந்த வண்ணம் இருப்பதாகவும், தூசி மண்டலத்தால் அது மூடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

மத்திய தரைக்கடலின் கிழக்கில் தரித்துள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இருந்து குறூஸ் மற்றும் ரொமஹறவாக் ஏவுகணை

(08ஆம் பக்கம் பார்க்க)



4600 இறாத்தல் (2086 கிலோ) குண்டுகளை வீசும் அமெரிக்க B-2 விமானம்.

### சீன மீன்பிடிக், கப்பல் மீதான தாக்குதல்

## புலிகளுக்கு தொடர்புள்ளதற்கான ஆதாரம் எதுவும் இல்லை!

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிப்படகு தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புள்ளது என்பதற்கு தீர்க்கமான ஆதாரம் எதுவும் இல்லை என்று சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப்படகு மீதான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகளோ அல்லது அரசோ காரணம் என்று கூறமுடியாது. கிடைத்த ஆதாரங்கள் தீர்க்கமான வகையில் இருக்கவில்லை. அக் கடற் பகுதியில் புலிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வேவு விமானம் நோட்டம்

(அலுவலக செய்தியாளர்)

வன்னி வான்பரப்பில் சிறிலங்கா விமானப்படையின் வேவு விமானம் ஒன்று நேற்றுப் பறந்து வேவு நடவடிக்கையில் ஈடுபட்டது. கிளிநொச்சிப் பகுதியில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் சீன மீனவர் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மூழ்கிய சீன மீன்பிடி இழுவைப் படகில் பயணம் செய்த சீன மீனவர் ஒருவரின் சடலம் நேற்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நாகர்கோவில் கடற்பிரதேசத்தில் கரையொதுங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## ம. நே. க. அகற்றல் பிரிவினரால் வெடிப்பொருட்கள் தகர்த்தழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் விசேட பயிற்சி பெற்றஅணியினரால் ஆனையிறவுப் பகுதியில் வெடிக்கும் நிலையில் காணப்பட்ட 1063 வெடி பொருட்கள் மீட்கப்பட்டு தகர்த்தழிக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வு நேற்று பிற்பகல் 4 மணிக்கும், நேற்று முன் தினம் பிற்பகல் 5.30 மணிக்கும் நடைபெற்றது. விசேட அணியினரால் ஆனையிறவுப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட 60 மி.மீற்றர் பரா எறிகணைகள் 565, 81 மி.மீற்றர் எறிகணை 64, 82 மி.மீற்றர் எறிகணை 08, 2 மி.மீற்றர்எறிகணை 02, 120 மி.மீற்றர் எறிகணை 29, 100

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் விவகாரக்குழு இன்று வெளிநாடு பயணமாகிறது

(அலுவலக செய்தியாளர்)

சமஷ்டி குறித்து அறியும் புலிகளின் 16 பேர் கொண்ட அரசியல் விவகாரக் குழுவினர் வெளிநாட்டில் உள்ள ஐந்து பேருடன் இணைந்து வெளிநாடுகளுக்கு பயணமாகவுள்ளனர்.

இக்குழுவுடன் நோர்வே, பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு செல்வதுடன் வெளிநாடுகளில் உள்ள உறுப்பினர்களான கணபதிப்பிள்ளை - விநோதினி (பிரிட்டன்), சூசைப்பிள்ளை டேவிற் அன்ரன் தவராஜ் (சுவிஸ்) நேரு குணரட்ணம் (கனடா) சுதாகரன் நடராஜா (பிரிட்டன்) பாஸ்கரன் (நோர்வே) ஆகியோர் வெளிநாடுகளில் இருந்து இணைந்து கொள்ளவுள்ளனர்.

இக்குழுவில் ஐந்து பெண் போராளிகளுட்பட மொத்தம் இருபத்தியொரு பேரும் முதலில் நோர்வே சென்று அடுத்து சுவீடன் பின்லாந்திற்கு சென்று இறுதியாக டென்மார்க் செல்லவுள்ளனர்.

தமிழீழத்தில் இருந்து செல்லும் 16 விடுதலைப்புலிகளும் கொழும்பிலிருந்து இன்றிரவு 2.30 மணிக்கு நோர்வே பயணமாகி ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச ரீதியான பிரச்சினைகளில் சுயாட்சி, சமஷ்டி மூலம் அரசியல்தீர்வு காணல் தொடர்

(08ஆம் பக்கம் பார்க்க)

### ஜப்பான் பேச்சுக்களில் கலந்து கொண்ட

## தமிழ்ச்செல்வன், கருணா நேற்றுத் தாயகம் திரும்பினர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வந்து சேர்ந்தார்.

ஜப்பான் ஹைக்கோன் நகரில் நடைபெற்ற 6 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு சென்றிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளரும் குழுவினரும் நேற்றுக் காலை 9.25 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

இதேவேளை மூத்த தளபதி

(08ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய பெண்கள் மாநாடு இரண்டாவது நாள்

## பெண்களின் கல்வி, பொருளாதார நிலை குறித்து நேற்று ஆராய்வு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சமூக பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் தேசிய பெண்கள் மாநாடு நேற்று இரண்டாவது நாளாக இடம் பெற்றது.

பெண்களும் கல்வியும், பெண்களும் பொருளாதாரமும், பெண்களும் உடல்நலமும் ஆகிய தலைப்புக்களில் இடம்பெற்ற அமர்வுகளில் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன், கௌரி, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இறுதிநாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன. இம்மாநாட்டில் இடம்பெற்ற கருத்தமர்வுகளின் அடிப்படையில் பெண்கள் தொடர்பான பிரகடனம் ஒன்றும் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

தளபதி கேணல் கருணா அவர்கள் இறுதி நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

# கிளி. வனவளப் பாதுகாப்பு செயலகம் நேற்றுத் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வனவள பாதுகாப்பு செயலகம் நேற்று பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி டிப்போ வீதி கனகபுரம் 9ஆம் பண்ணையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கினை தமிழீழ வனவள பாதுகாப்புப்பிரிவு நடுவப் பணிமனையைச் சேர்ந்த அன்ன லிங்கம், போராளி தாடிஐயா ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் நடுவப் பணியக நிர்வாகப் பொறுப்பாளர் சுமன் ஏற்றிவைத்தார்.

பணிமனைப் பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவீரர் பணிமனையைச் சேர்ந்த தியாகு திரை நீக்கம் செய்து வைத்தார். செயலகத்தினை தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவுப்பொறுப்பாளர் சக்தி அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மாவீரர் பணிமனையைச் சேர்ந்த திருக்குமரன், கருணாரட்ணம் அடிகள் மற்றும் நிறுவன துறைசார் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (சோ.லோ)



படம்: சோதி

# கணினிக் கருத்தமர்வில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் கம்பியூட்டர் எக்ஸ்பிறஸ் சஞ்சிகை நிறுவனத்தினரின் கணினி கருத்தமர்வு இறுதிநாள் நிகழ்வும், கணினிப் பயிற்சி நிறைவு விழாவும் நேற்று பி.ப. 3.00 மணிக்கு கிளிநொச்சி தமிழீழ மாணவர் அமைப்பு நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன், கம்பியூட்டர் எக்ஸ் பிறஸ் பிரதம ஆசிரியர் றொபின் சன் செல்வகுமார், தமிழ் கணினி ஒருங்கிணைப்பு நிறுவன கணினி விரிவுரையாளர் செந்தில்குமரன், அரசியல்துறை நிதிப்பொறுப்பாளர் ஆதவன்ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கியதுடன் கணினி பயிற்சிநெறியினை நிறைவு செய்த மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். மேற்படி பயிற்சியில் 90ற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற ரி. யாலவன், ரி. பிறேமினி, எஸ். காயத்திரி ஆகியோருக்கு சிறப்புப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)


விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் வே. பாலகுமாரன் சான்றிதழ் வழங்குகிறார். (படம்: சோதி)

# கிராமிய அபிவிருத்தி வங்கி மல்லாவிக்கிளை திறப்பு

கிராமிய அபிவிருத்தி வங்கியின் மல்லாவி பிரதேசக் கிளை நேற்றுக் காலை 10.00 மணிக்கு மல்லாவியில் திறந்து வைக்கப் பட்டது.

கிராமிய அபிவிருத்தி வங்கி மல்லாவிக்கிளை மேலாளர் மதியழகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளை வங்கியின் பணிப்பாளர் ப. சுஜன், கமக்கார அமைப்பு ஒருங்கிணைப்பாளர் ப.தியாகராஜா ஆகியோரும் சிறப்புரையினை துணுக்காய் பிரதேச செயலாளரும் நிகழ்த்தினர்.

வங்கியின் பெயர்ப்பலகையினை தமிழீழ வைப்பக மேலாளர் திருமதி கௌரி சுரேஸ் திரை நீக்கம் செய்து வைத்தார்.

வங்கி அலுவலகத்தை துணுக்காய்ப் பிரதேச செயலாளர் திருமதி ப. தியாகராஜா அவர்கள் திறந்துவைத்தார். (சோ.லோ)

## பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நடாத்தும் கணினிப் பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (சோ.லோ)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு மு/கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தமது முதல் நியமனக் கடிதத்துடனும் தேசிய அடையாள அட்டையுடனும், தவறாது சமுகம் அளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுக்கொள்கிறார். (சோ.லோ)

## பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதி II மாணவர்களுக்கான பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறும்.

இன்று காலை 9.00 மணியளவில் கிளி. மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதே போன்று நாளையும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வேதனம் வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களின் 2003 க்கான பங்குனி, சித்திரை மாத வேதனம் தற்பொழுது கிளிநொச்சி றம்மியா. மைதிலி களஞ்சியத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் 08-04-2003ஆம் திகதி கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான வேதனம் வழங்கப்படவுள்ளது.

## அங்குரார்ப்பணை கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை பி.ப. 2.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்திற்குத் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வித்தியாலய அதிபர் யோகநாதன் வேண்டியுள்ளார். (சோ)

## வீதிப் பாதுகாப்புச் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி/வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப்பிரிவினரால் நடாத்தப்படும் வீதிப் பாதுகாப்பு ஒழுங்கமைப்பு செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு கிளி.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் தலைமையில் இன்றும், நாளையும் இருநாட்கள் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் யுனிசெவ் நிறுவன மல்லாவி வதிவிடப் பிரதிநிதி திருமதி பெனிபுருன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் கிளி.வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ம. பத்மநாதன், முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் செ.சின்னத்துரை, கிளிநொச்சி காவல் பணிமனை தலைமைக் காவலர் இ.மனோகரன், மேற்பார்வையாளர் இ.கனகலிங்கம் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர். (சோ)

# தென்னைச் செய்கைக்கு மானியம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, செயலர் பிரிவுகளில் தென்னை பயிர் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு தென்னை பயிர்ச்செய்கைக்கான மானியம் வழங்கப்படவுள்ளதாக கிளி.மாவட்ட தென்னைப் அபிவிருத்தி அலுவலர் க. தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் கிளி. அரச செயலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நேரில் வருகை தந்து பெற்றுக் கொள்ளலாமெனவும்.

மேற்படி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள வருகை தருபவர்கள் காணி உரிமையாளரது வங்கிக் கணக்குப்புத்தகம், காணியின் உறுதிப்பத்திரம் அல்லது காணி அலுவலரின் அனுமதிப்பத்திரம் மற்றும் காணிகள் வழங்கப்பெற்று அதற்கான அனுமதிப்பத்திரம் கிடைக்கத்தவறியவர்கள் கிராமசேவை அலுவலர், பிரதேச செயலரின் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுவரும் படியும், வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிகளில் குடியிருப்பவர்கள் அவர்களால் செய்கை மேற்கொள்ள வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்துடனும் வருகை தரும்வண்ணம் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
15-12-1934

உதிர்வு:
01-04-2000

அமரர் திரு. மாப்பாணர் கந்தையா
திதி: 29-03- 2003

எங்கள் பாசத்தின் திருவுருவே
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
எங்களை விட்டுப்பிரிந்து மூன்றாண்டாயினவே
என்றாலும் உங்கள் நினைவு எங்களோடிருக்கும்.

உங்கள் நினைவோடிருக்கும்.
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்மார்,
மைத்துனிமார், சகோதரர்கள், சகோதரி,
உற்றார், உறவினர்.

4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:
(2818) திருமதி க.கமலாதேவி

2ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில்
21
□
05
□
1976



தாயக மண்ணில்
29
□
03
□
2001

கடற்கரும்புலி மேஜர் காந்தன்
(மகாதேவன் சுதாகரன்)
கொக்குத்தொடுவாய். மணலாறு.

காலன் இட்ட கட்டளையில் கரிகாலன்
சேனையில் உன்னை இணைத்த
அன்னியரின் வெறிகண்டு போட்டார்
பிரிவில் முழுமையாய் செயற்பட்ட வீரனே!
பின் சூர் கடற்கரும்புலியாய் [illegible]
வீரனே! நீகடல் நடுவே கலங்கள் பல
தகர்த்தாய் கடல்கருவேங்கை நீ நிம்மதியாய்
உறங்கு. விரைவில் எம் தலைவன் காலத்தில்
ஈழம் மலரும்.

தற்போதைய முகவரி:
நெடுங்கேணி மத்தி.

தகவல்:
(சி-7732) குடும்பத்தினர்.

# சதாமைப் பதவி கவிழ்க்கும்வரை யுத்தம் தொடர்ந்து நடைபெறும்!

## அமெரிக்க சனாதிபதி புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

**ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்க்கும் தனது நோக்கம் நிறைவேறும் வரை யுத்தம் தொடரும் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார். காம்டேவிட்டில் பிரித்தானியாப் பிரதமர் ரொனிபிளேயருடனான சந்திப்பின் பின் செய்தியாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு திட்டத்தை அமெரிக்கா விரைவில் அறிவிக்கவுள்ளது எனத் தெரிவித்த அவர், சமாதானத்திட்ட விபரங்களை அவர் தெரிவிக்கவில்லை. அமெரிக்கா, ரஷ்யா, ஐ.நா மற்றும் ஐரோப்பிய யூனியனின் ராஜ்ய அதிகாரிகள் தயாரித்துள்ள இந்த சமாதானத் திட்டம் இஸ்ரேல், பலஸ்தீன சண்டைகளுக்கு முடிவு காண்பதற்கும் 2005 ஆம் ஆண்டிற்குள் பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்க எடுக் கப்படவுள்ள நடவடிக்கைகளை விப ரிப்பது குறிப்பிடத் தக்கது.

அத்துடன் ஈராக் யுத்தத்தில் யுத்தநிறுத்தத்திற்கு வழி இல்லை என அமெரிக்க பாதுகாப்பமைச்சர் கூறியுள்ளார்.

ஈராக்கில் ஒருவாரகால யுத்தம் நடைபெற்று வருகின்றவேளை ஒவ்வொரு நாளும் முன்னேறிவருவதாகவும் அங்கு அவசரமாகத் தேவைப்படும் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளிலுள்ள முட்டுக்கட்டைகளை நீக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும், புஷ்சும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.



பிரித்தானியப் பிரதமரும் அமெரிக்க சனாதிபதியும்

இதேவேளை, மனிதாபிமான உதவிகளை ஈராக்கிய மக்களுக்கு வழங்குவதில் அமெரிக்காவும் பிரிட்டனும் தலையிடக் கூடாது என ரஷ்யாவும், சிரியாவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஈராக்கின் 02 கோடி 60 லட்சம் மக்களில் 60 சதவீதமானோர் இத்திட்டத்திலேயே முற்றாகத் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வாக்குறுதி அளித்தபடி அமெரிக்க அரசு கூட்டுப்படைகளுக்கு ஆதரவாக மேலும் 280 ஆயிரம் படைகளை இரண்டொரு நாட்களில் அனுப்புவதாகத் தெரிவித்துள்ளது.

டாங்கிப் பிரிவுக் கட்டளை அதிகாரி கூறும்போது , இச்சண்டையில் 42 பேரைத் தமது தரப்பு இழந்துள்ளதாகத் தெரிவித்தார். பதுங்கு குழிகளைத் தாக்குமுன் வாகனங்களின் மறைவில் இருந்து எதிர்த் தாக்குதல் நடைபெறுவதாகவும் தாக்குபவர்கள் யார் என்பது தெரியவில்லை எனவும் அமெரிக்க விமானப்படை அதிகாரி தெரிவிக்கிறார்.



பாக்தாத் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சினால் எழும் புகை மண்டலம்

## குர்திஷ் போராளிகள் ஈராக் பகுதிக்குள் முன்னேற்றம்

ஈராக்கிய குர்திஷ் போராளிகள் ஈராக் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் முன்னேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது - அமெரிக்க யுத்தம் ஆரம்பமான பிறகு இவர்கள் மேற்கொள்ளும் முதல் நகர்வு இதுவாகும் என ராய்ட்டர் செய்தி ஒன்று தெரிவிப்பதுடன் முன்னணி காவலரண் பகுதியில் பெரும் கூட்டத்தைக்கண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய படைகளுக்கும் குர்திஷ் படையினருக்கும் இடையே மோதல் நடைபெற்ற அறிகுறிகள் தென்படவில்ல்லை என்றார். குர்திஷ் தளபதி மாம் நொஸ்டம் குறிப்பிடும் போது தாங்கள் மலைப்பகுதியைக் கைப்பற்றியுள்ளதாகவும் தமது படையினர் இரண்டரை மைல்கள் ஈராக்கிய கட்டுப்பாட்டுப் பகுதியில் முன்னேறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜம்மு – காஷ்மீர் மோதலில் இரு இராணுவத்தினர் பலி

ஜம்மு காஷ்மீரில் இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இராணுவ மேஜர் ஒருவரும் ஒரு இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். மேலும் இரண்டு படையினர் காயமடைந் துள்ளனர்.

இச்சம்பவத்தில் போராளிகள் மூன்று பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இறுதி வெற்றி ஈராக்கிற்கே 10 நாட்களுக்குள் முடிவு வராது

### ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பாக்தாத்தில் நேற்று முன்தினமிரவு அதிக எண்ணிக்கையான குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.


சனாதிபதி சதாமை பதவி கவிழ்ப்பதற்கான யுத்தம் இரண்டாவது வாரத்திற்கு எட்டியுள்ளதை அது காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். சனாதிபதி மாளிகைகள் உட்பட பல இலக்குகள் மீதுதாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.



பாக்தாத்தில் ஈராக்கியப் படைகள்

ஈராக்கிய பாதுகாப்பமைச்சர் கூறுகையில்; அமெரிக்கா தலைமையிலான இராணுவத்தினர் 05 அல்லது 10 நாட்களுக்குள் பாக்தாத்தைச் சுற்றிவளைத்து விடுவார்கள் என நம்புவதாக அறிவித்துள்ளார். இருப்பினும் இறுதி வெற்றி ஈராக்கிற்கே கிடைக்கும் என கூறியுள்ளார். 10 நாட்களுக்குள் எந்த முடிவும் வந்துவிடாது எனவும், யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர பல மாதங்களாகலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக் யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட பிரிட்டிஷ் படைவீரர்களை கொலை செய்துள்ளதாகப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் விடுத்துள்ள குற்றச்சாட்டை ஈராக் மறுத்துள்ளது. ஈராக்கிய தகவல் அமைச்சர் இம் மறுப்பை வெளியிட் டுள்ளார்கள். பிரிட்டிஷ் வீரர்கள் தொடர்பாக ரொனி பிளேயர் பொய்யான தகவலைக் கூறியுள்ளதாகக் கூறிய அவர் ஈராக் எவரையும் கொலை செய்ய வில்லையென மேலும் தெரிவித்துள்ளார்.



பஸ்ரா நகருக்கண்மையில் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கும் பிரித்தானியா டாங்கிகள்

## கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை ரஷ்யா பரிசோதிப்பு

கண்டம்விட்டுக் கண்டம் பாயும் அதி சக்திவாய்ந்த ஏவுகணை ஒன்றை ரஷ்யா நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசீலித்துள்ளது. ரெப்-பெல்-ஆர். எஸ் 12. எம்.ஐ.சி.பி என்ற ஏவுகணை அணுவாயுதங்களைத் தாங்கி சுமார் பதினையாயிரம் கிலோ மீற்றர் தூரம்வரை சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் உலகின் எந்த இலக்கையும் மேற்படி ஏவுகணையால் தாக்கமுடியும் எனவும் கூறப்படுகின்றது.

ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் உள்ள விண்வெளி ஏவுதளம் ஒன்றில் இருந்து ஏவுகணை பரிசீலிக் கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை ரசியாவின் கிழக்குப் பகுதியில் சென்று வீழ்ந்ததாக கூறப்படுகின்றது. ரஷ்யாவின் இத்தகைய பரிசோதனை பல்வேறுபட்ட நாடுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இது அமெரிக்காவிற்கு விடுத்திருக்கும் மறைமுக எச்சரிக்கையாக இருக்கலாம் என படைத்துறை நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## சிம்பாவ்வே நெருக்கடிக்குத் தீர்வுகாண தெ.ஆபிரிக்க அபிவிருத்தி சமூகம் முயற்சி

சிம்பாவ்வேயின் பொருளாதார அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கென தென்னாபிரிக்க அபிவிருத்திச் சமூகம் என்ற அமைப்பு அடுத்தவாரம் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இத்தகவலை மொசாம்பிக் சனாதிபதி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். ராய்ட்டர் செய்தித் தாபனத்திற்கு அவர் கூறுகையில: சிம்பாவ்வே பிரச்சினை காரணமாக தென்னாபிரிக்க நாடுகளில் தீவிர தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த நாடுகளுக்கும் உதவிவழங்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் கூறியுள்ளார். இதற்கு நிவாரணம் காணும் வகையில் தென்னாபிரிக்க அபிவிருத்தி அமைப்பின் சிம்பாவ்வே சம்பந்தமான வெளிநாட்டுப்பாதுகாப்பு உள்துறை அமைச்சர்கள் சிம்பாவ்வே அரசாங்கத்துடன் கலந்துரையாடவுள்ளனர். தென்னாபிரிக்க அபிவிருத்தி அமைப்பு நாடுகளுக்கிடையில் சிம்பாவ்வே விவகாரம் தொடர்பாக ஏகோபித்த அபிப்பிராயமும், அடிக்கடி தொடர்புகளும் இடம் பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிம்பாவ்வேயின் தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்து பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் சிம்பாவ்வே அரசாங்க பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என மொசாம்பிக் சனாதிபதி கூறியுள்ளார்.




01) கொழும்பு ரோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடன் முதலாவது இரத்தசேமிப்பகம் இலங்கையில்எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
☐ 2002-12-14

02) தீக்குச்சி எப்போது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
☐ 1827இல் ஜான்வாக்கர்.

03) எந்த உயிரினமும் வாழ முடியாத அதிக உப்பு செறிவுள்ள கடல் எது?
☐ டெட்சீ (Deadsea)

04) தென்னாபிரிக்காவிலுள்ள கூர்மூக்குத் தவளை எவ்வளவு தூரம் எம்பித் தாவக்கூடியது?
☐ 33 அடி நீளம்.

05) உலகிலேயே மிகப் பெரிய மெக்ஸிக்கோ வளைகுடாவின் பரப்பு என்ன?
☐ 5,80,000 சதுரமைல்கள்.

06) குழந்தைகளை உறங்க வைக்கும், வர்ண விளக்குகள் பொருந்திய போர்வையை வடிவமைத்தவர் யார்?
☐ இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ்

07) ஏழு மலைகளின் நகரம் அல்லது அழியாத நகரம் என அழைக்கப்படும் இடம் எது?
☐ உரோமபுரி

08) சத்தம் போடாத விலங்கு எது?
☐ ஒட்டகச் சிவிங்கி

09) இயந்திரம் பொருத்தப்படாத விமானத்தில் முதலில் பறந்தவர் யார்?
☐ ஆர். - வில்லி ரைட்

10) கொய்யாப்பழத்தின் பூர்வீகம் எது?
☐ மத்திய அமெரிக்கா

11) புரோத்திரனைக் கண்டுபிடித்தவர் யார்?
☐ இரத. போட்

12) பூனைகளுக்கான அகில உலக சாம்பியன் போட்டியை அண்மையில் நடத்திய நாடு எது?
☐ ரஷ்யா.

13) பறவைகளில் கொக்கின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?
☐ 24 வருடம்

14) புலிட்சர் விருது எதற்கு வழங்கப்படுகின்றது?
☐ பத்திரிகைத்துறை

15) உலகிலேயே உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரதப் பாதை எங்கே உள்ளது?
☐ பேருவிலுள்ள பசுபிக் கரையிலுள்ள கலாவோ என்ற இடத்திலிருந்து, லாஒறோயா வரை செல்கின்றது.

16) மனித தலையில் எத்தனை எலும்புகள் உண்டு?
☐ 07

17) புதன் கிரகத்தில் ஒரு நாள் என்பது பூமியில் எத்தனை நாட்களுக்குச் சமனானது?
☐ 180 நாட்கள்

18) கற்றாளையின் தாவரவியல் பெயர் என்ன?
☐ அல்வோரா

19) தார் பாலைநிலம் எங்கே அமைந்துள்ளது?
☐ வடமேற்கு இந்தியாவில்

20) உலகில் மிகப் பெரிய எரிமலை எது?
☐ கிலானிய

21) பிஜீ தீவுகளின் பிரதான உற்பத்தி எது?
☐ சீனி

22) உலகில் மிகப் பெரிய குடாநாடு எது?
☐ அராபியக் குடாநாடு

23) 9ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
☐ மேற்கிந்தியத்தீவுகள்.

# டெலி மெடிசின்; இணையத்தின் உதவியுடன் மருத்துவம்

இன்றைய நவீன தொழில்நுட்பத்துறையும், மருத்துவத்துறையும் கைகோர்த்துக் கொண்டு உருவாகியுள்ள ஒரு மருத்துவ முறையே "டெலிமெடிசின்" என்பதாகும்.

ஒரு கம்பியூட்டருடன் இணைந்த உபகரணம், வீடியோ போன், கம்பியூட்டர் இணைப்பு மற்றும் இன்டநெட் என்பவற்றை இணைத்து உருவானதே "டெலிமெடிசின்" இதனை தொலை தூர மருத்துவம் என்று கூறலாம்.

"டெலிமெடிசின்" முறை மூலம் சிகிச்சைபெற நோயாளியை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டியதில்லை. அதேபோல் மருத்துவரும் வீட்டிற்கு வரவேண்டியதில்லை.

டெலிமெடிசின் எவ்வாறு செயற்படுகின்றது எனில் - நோயாளி எங்கு உள்ளாரோ அங்கே ஒருகருவி பொருத்தப்படும். இக்கருவி ஒரு கம்பியூட்டர் மற்றும் தொலைபேசியுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் நோயாளி மருத்துவரை தொடர்பு கொள்ளலாம்.

மருத்துவரும் தனது இருப்பிடத்திலிருந்தே நோயாளியின் உடலைப் பரிசோதித்து அறியலாம். நோயாளியின் இதயத் துடிப்பு முதல் அவரது எக்ஸ்-றே வரை அனைத்தையும் மருத்துவர் தன் இருப்பிடத்திலிருந்து தனது கம்பியூட்டர் மூலமாக அறியலாம்.

இவ்வகை வியப்புமிகு மருத்துவமுறை தற்போது ஆய்வு முறையில் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அமெரிக்காவில் அண்மையில் "கொடக் லை.'. ப்வியூ கேர் ஸ்டேஷன்" என்ற டெலிமெடிசின் கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டி நிர்வாக அரச அமைப்பு இக்கருவியை வியாபார ரீதியில் பயன்படுத்த அனுமதித்துள்ளது. இக்கருவியை நோயாளியின் இருப்பிடத்தில் பொருத்திவிட்டால் போதும்.

டெலிமெடிசின் முறை மூலம் நாம் எவ்வாறு மருத்துவம் செய்து கொள்வது?

நோயாளி மருத்துவரை வீடியோ போன் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும். இதனால் நோயாளியும் மருத்துவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே பேசமுடியும்.

டெலிமெடிசினில் மருத்துவர்கள் நோயாளிகளுக்கிடையே தகவல் தொடர்பு முக்கியமானது. எனவே டெலிமெடிசினில் முக்கிய பங்கு பெறப்போவது ரெலி றோடியோலொஜி ஆகும்.

நோயாளியின் எக்ஸ்-றே படங்கள், சோனோகிராம், சீ.ஏ.டி.ஸ்கேன் படங்கள் எல்லாம் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு டிஜிட்டல் வடிவில் அனுப்பப்படும்.

அத்துடன், டெலிகாடியலஜியும் உண்டு. இதன்படி நோயாளியின் இதய ஓட்டப் பதிவுகளும் (Electro Cardiogram) டிஜிட்டல் வடிவில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்பப்படும்.

தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் "வீடியோ கொன்பெரன்சிங்" வசதியும் உண்டு.

இதன் மூலம் ஒரு நோயாளியின் எக்ஸ்-றே ஈ.சி.ஜி படங்களை ஒரே கணப்பொழுதில் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிறந்த மருத்துவர் அறிந்து சிகிச்சைகளைக் கலந்தாலோசிக்க முடியும்.

டெலிமெடிசின் மூலம் சரியான சிகிச்சை பெற முடியுமா என்றால் நிச்சயமாகப் பெறமுடியும்.

ஏனெனில், ஒருநோய் குறித்து பல்வேறு மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசிக்க இம்மருத்துவ முறை வழி கோலுகின்றது.

இத்தகைய சாதனைகளைச் செய்யும் டெலிமெடிசினுக்கான கருவி வெளிநாடுகளில் புழக்கத்துக்கு வந்துவிட்டன. இம்முறை மூலம் நோயாளரும் மருத்துவரும் இடத்துக்கிடம் அலைய வேண்டியதில்லை.

கப்பல், விமானம் போன்றவற்றில் பயணிப்போருக்கு திடீரென ஏற்படும் உடல்நிலை உபாதைகளுக்கு டெலிமெடிசின் மூலம் சிகிச்சை செய்யலாம்.

போர்க் காலங்களில் நாட்டின் எல்லைப் புறங்களில் உயிருக்காகப் போராடும் வீரர்களுக்கும் இம்முறை மருத்துவம் உதவும். இவையெல்லாம் சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டவையாகும்.

அமெரிக்க சிறைச்சாலைகளில் நோயாளிகளுக்கு டெலிமெடிசின் மூலம் சிகிச்சையளிக்கின்றனர்.

காரணம் கைதிகளை வெளிக் கொணர்வதிலுள்ள பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கவேயாகும்.

டெலிமெடிசின் கிராமங்களிலுள்ள நோயாளிகளுக்கென அளவில்லாத சிகிச்சை வசதிகளை வழங்கும். இம்முறை மருத்துவத்திற்கு ஆதாரமானது தொலைத்தொடர்பு ஆகும்.

# மெரீனா சிட்டி (Marina City)

சென்னை மாநகரின் மெரீனா கடற்கரை உலகில் இரண்டாவது கடற்கரையாகக் கூறப்படுகிறது. அது போலவே, சிகாகோவில் உள்ள மெரினா சிட்டியும் பெருமையுடன் கூறப்படுகிறது- பெயர்தான் நகரம் என்றுள்ள தேயன்றி, இது நெடிதுயர்ந்து நிற்கும் அழகிய கட்டடம் ஆகும்.

மெரினா சிட்டி என்ற இந்தக் கட்டடம் 'இரட்டைப்பிள்ளை' களாக சிகாகோ நதி தீரத்தை யொட்டினாற்போல் கம்பீரமாக நிற்கின்றது. டெட்ரண்ட் கோல்டுபர்க் அசோசியேட்ஸ் என்ற புகழ்வாய்ந்த கட்டடக்கலை நிபுணர்கள் தான் இக்கட்டடத்தை நிர்மாணித்தார்கள். இக்கட்டடத்தின் அழகைக் கூட்டிக்காட்டுவதற்கு இதன் அருகில் சலனமற்று ஓடிக்கொண்டிருக்கும் கிகாகோ நதியும் காரணம் எனலாம். அது மட்டுமா? இன்னொரு பக்கம் ஒருநூறு யார் தொலைவில் அமைந் துள்ள மிக்சிகன் லேக்என்ற மிகப்பெரிய ஏரியும் மெரினா சிட்டி கட்டடத்திற்கு அழகு சேர்க்கிறது.

வட்டவடிவத்தில் அமைந்துள்ள இந்த இரட்டைக் கட்டடங்கள் தலா 60 அடுக்குகளைக் கொண்டன வாகும். இந்தக் கட்டடங்களில் மொத்தம் 896 குடியிருப்பு வீடுகள் உள்ளன. முதல் 19 அடுக்குகள், வெறும் கார் தரிப்பிட வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 896 வீட்டுக்காரர்களுக்குரியகார்கள் இங்கே நிறுத்தப்படுகின்றன. 20ஆவது மாடியிலிருந்து 60ஆவது மாடிவரை 896 வீடுகள் அமைந்துள்ளன. இக்கட்டடங்களுக்குப் பக்கத்தில் 16 அடுக்கு மாடிக்கட்டடம் ஒன்று உள்ளது. இதில் அந்த 896 வீடுகள் உரிமையாளர்களுக்கென்று கடைகள், உணவு விடுதிகள், நாடக திரை அரங்குகள், அழகுக்கலைக் காட்சியம், நீச்சல்குளம், விளையாட்டுத்திடல் என்று சகல வசதிகளும் நவீன முறையில் அமைந்துள்ளன.

896 வீடுகளில் ஒற்றைப்படுக்கை அறை (Singie bed Room) வசதியுடன் 576 வீடுகளாகும், மற்றவை இரட்டைப் படுக்கையறைகளுடன் கூடிய வீடுகளாகும். மொத்தத்தில் செல்வம் கொழிக்கும் அமெரிக்காவின் பிரதான நகரமான சிகாகோவில், நடுத்தரக் குடும்பங்கள் வசிப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்டது இது என்று கூறப்படுகின்றது. இந்த குடியிருப்பில் வசிப்பவர்கள் தங்கள் வீட்டு ஜன்னல்களின் வழியாக சிகாகோ நதியின் எழிலையும், மிக்சிக்கன் ஏரியின் அழகையும் ரசிக்கலாம். இரவில், சிகாகோ நதியின் ஓரத்தில் வரிசையாக அமைந்துள்ள வானுயரக்கட்டடங்கள் சிகாகோ நதியில் பிரதிபலிக்கும் அழகை அனுபவிப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஆவர். அந்தக் கொடுப்பினையை மெரினாசிட்டி கட்டடவாசிகள் பெற்றிருக் கிறார்கள்!

# பார்வை இழந்தோர் தொகை 10 கோடி



இன்றைய (2003) கணிப்பின்படி உலகில் பார்வை இழந்தவர்களின் எண்ணிக்கை 10 கோடியையும் தாண்டிவிட்டது.

இதில் அரபு நாடுகளில் மட்டும் பார்வை இழந்தோர் தொகை 06 மில்லியன் ஆகும்.

இந்தோனேசியாவில்இரு கண்களும் பார்வை இழந்தவர்களின் தொகை 2.4 மில்லியனாகவும், ஒரு கண் பார்வையை இழந்தவர்களின் எண்ணிக்கை 4.2 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

புருண்டி, ருவாண்டா போன்ற ஆபிரிக்க நாடுகளிலே பிறவியிலேயே கண்பார்வை இழந்தோர் அதிகம் காணப்படுகின்றனர்.

ஓரக்கண் பார்வை உள்ளவர்கள் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிலேயே அதிகம் உள்ளனர்.

சோமாலியா, எதியொப்பியா, இஸ்ரவேல், உகண்டா போன்ற நாடுகளில் இளம் வயதில் கண்ணாடி பாவிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம்.

வியட்நாம், கம்பூச்சியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் மாலைக்கண் பார்வை உள்ளவர்கள் அதிகமாக உள்ளனர்.

# இளமையைப் பாதுகாக்க புதிய மருந்து

காலச் சுழற்சியில், இயற்கைக்கு முரணான இயலாத காரியம் என்றாலும், முதுமை தட்டாமல் என்றும் இளமையோடு இருக்க சகலருக்கும் ஆசைதான்.

மனிதர்களின் இந்த மனோ நிலையை நன்கு புரிந்துகொண்ட பிரான்ஸ் நாட்டின் "கோடலி லேபோரெட்ரீஸ்" விஞ்ஞான ஆய்வு கூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மெட்டில்டே தோமஸ் வயது மூப்பில் தோல் சுருங்காமல், தலைமயிர் நரைக்காமல், ஆரோக்கியத் துடன் இருப்பதற்குப் புதிய மருந்து ஒன்றைக் கண்டு பிடித்து, அது வெற்றியளிக்கும் நிலையில் இருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இளமையைத் தொடர்ந்து பேணுவதற்கு உரிய மூலக்கூறுகளாக இதுவரை விட்டமின் "இ"யும் விட்டமின் "சி"யும் இனங் காணப் பட்டிருந்த நிலையில், "மெட்டில்டே தோமஸ்" OPA- ஒலிகோ மெட்ரிக் புரோ அந் தோசயனி டொலிக் (Oligomerig Pro Anthocyanidolic) எனும் புதிய இரசாயனக் கலவையைக் கண்டு பிடித்திருப்பதில், விஞ்ஞான உலகில் புதியதும், கடினமுமான முயற்சி இதுவென விஞ் ஞான ஆய் வாளர் கள் தெரிவித்துள்ளனர்.

சிகரெட் புகை, விஷ - அமில வாயுக்கள், மாசுபட்ட சுற்றாடல் போன்றவற்றின் தாக்கத்தினால் சோபை இழக்கும் மனித தோலைப் பாதுகாக்கும் தன்மை OPA-யை விட வேறெந்த மருந்துக்கும் இல்லை. என்பது மெட்டில்டே தோமஸின் கருத்து.

உலகநாடுகள் பலவற்றில் தற்போது இம்மருந்தின் தேவை உணரப்பட்டிருப்பதாக அறியும் கோடலி லெபோரெட்ரீஸ் விஞ்ஞான ஆய்வு கூடம் இம் மருந்தின் உற்பத்தியை துரிதப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

# தேர்தலில் புள்ளடியிட பென்சில் பாவிப்பது ஏன்?



ஆரம்ப காலங்களில் தேர்தலில் வாக்குச் சீட்டுக்களில் புள்ளடி இடுவதற்கு முள் பேனா (மையில் தொட்டு எழுதும் பேனா) ஊற்றுப் பேனா, பென்சில் என்பன பாவிக்கப்பட்டது.

பேனா பாவிக்கும் போது அதிலுள்ள மை கசிந்து வாக்குச் சீட்டுப் பழுதடையலாம் என்பதுடன், முள் பேனா பாவிக்கும் போது மைகூடு ஒன்றைத் தனியாக வைப்பது சிரமம் என்பதாலும், இவை இரண்டும் கைவிடப்பட்டு, பென்சில் பாவிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பிற்காலத்தில் போல் பொயிண்ட் பேனா பாவனைக்கு வந்த போதும், பென்சில்தான் தேர்தலில் புள்ளடியிடப் பாவிக்கப்பட்டது. இன்றும் பென்சில் பாவனை தொடர்கின்றது.

# மழலை மேதைகள்

**மைக்கல் கர்னி அமெரிக்கன்:-**
1984இல் வயது ஆறாக இருக்கும் போது உலகில் குறைந்த வயதுடைய பட்டதாரியானவர்.

**வில்லியம் ஜேமிஸ்கிடிஸ்:-**
1902இல் வயது நான்காக இருக்கும் போது கிரேக்க இலக்கியமான ஹோமரின் படைப்பை வாசித்து விளங்கிக்கொண்டவர்.

**வொல்ப்கென்ங்மொசாட்:-**
1761 இல் வயது ஐந்தாக இருக்கும் போது சுயமாகவே சங்கீதக் கருவி ஒன்றை நிர்மாணித்தவர்.

**ஜெகூதி மெனுஹின்:-**
வயது ஏழாக இருக்கும் போது 1923இல் தனது முதலாவது வயலின் கச்சேரியை நடத்திக் காட்டியவர்.

**மாரியா கேவனா அஞ்னெய்:-**
கணிதவியலாளரான இவர், தனது ஒன்பதாவது வயதில் ஒப்படையை எழுதி வெளியிட்டவர்.

**ஷோன் பியாஜே:-**
பத்தாவது வயதில் தனது முதலாவது விஞ்ஞான ஆராய்ச்சியை வெளியிட்டவர்.

**பிளிஸிஸ் பெஸ்கல்:-**
பன்னிரண்டு வயதாக இருக்கும் போது, கணிதமேதையான யூக்லிட்டின் சகல கணித தோற்றங்களையும் கற்று முடித்திருந்தவர்.

**ருஷ் லோரன்ஸ்:-**
பன்னிரண்டு வயதாக இருக்கும்போது ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்க பிரவேசித்தவர்.

**பெப்லோ பிக்காஸோ:-**
1984இல் பதின்மூன்று வயதாக இருக்கும்போது தனது முதலாவது சித்திரக் கண்காட்சியை நடத்தியவர்.

**நதியா கொமனேசி:-**
1976இல் தனது பதின்நான்காவது வயதில் ஒலிம்பிக் விழாவில் வழங்கப்படும் 10 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்தவர்.

**சுப்பிரமணியம் சந்திரசேகரன்:-**
தனது ஆறாவது வயதில் தனது தந்தையின் கணினியை பாவிக்கத் தொடங்கியவர்.

# உலகில் வயதுகூடிய மனிதர் ஜப்பானில் வாழ்கிறார்

ஜப்பானிய பட்டுற்பத்தி நிறுவனத்தில் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ள யுகிச்சி சுகன்ஜி என்பவர் கடந்த 23ஆம் திகதியன்று இவர் தனது 114வது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார். 1889 மார்ச் 23ஆம் திகதி பிறந்த இவர் பாடசாலைக் கல்வி முடித்தபின் பட்டுற்பத்தி பயிற்சியாளராகவும் வங்கி ஊழியராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் தற்போது கண்பார்வை குன்றியுள்ளதால் படுக்கையிலேயே காலத்தைக் கழிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# வானத்தில் குப்பைத் தொட்டி?

பூமியில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும் அணுசக்தி இரசாயனக் கழிவுகளை அப்புறப்படுத்த வானத்தைக் குப்பைத் தொட்டியாகப் பயன்படுத்தலாமா.. என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

பூமிக்கு மேலே ஈர்ப்புவிசையற்ற அண்டவெளியில் இந்தக் கழிவுகளைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடலாமா..? என்பது குறித்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இதன் மூலம் அணு இரசாயனக் கழிவுகளால் பூமியில் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை நிரந்தரமாக அகற்றிவிட முடியும் என்பது இவர்களது கருத்து ஆகும்.

# கண்டுபிடிப்பே மரணத்திற்குக் காரணமாகியது.

மேரி கியூரியைப் பற்றி நாம் அறிவோம். மேரி கியூரியின் இயற்பெயர் மரியாஸ்க்டோ டோவ்ஸ்கா (sklodwska) இவரின் புகழுக்குக் காரணம் இவர் ஆற்றிய அறிவியல் பணியின் முக்கியத்துவமும் ஒரு பெண்ணாலும் தலை சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்து பெரும் சாதனை புரிய முடியும் என்பதை இவருடைய வாழ்க்கை திட்டவட்டமாக எடுத்துக்காட்டியதுமாகும்.

மேரிகியூரியின் மிகச் சிறந்த சாதனையாகப் போற்றப்படுவது ரேடியம் (Radiam) எனும் வேதியியல் கனிமத்தை கண்டுபிடித்தது.

1903ஆம் ஆண்டில் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1911ஆம் ஆண்டில் மீண்டும் மேரிகியூரிக்கு வேதியியல் சாதனைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதன் மூலம் முதன் முதலில் இரண்டு முறை நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமைக்கும் இவர் உரியவரானவர்.

மேரிகியூரியின் புகழுக்கு காரணமாக இருந்த ரேடியமே அவருடைய மரணத்திற்கும் காரணமாயிற்று என்பது அதிர்ச்சியைத் தருவதாகும்.

நெடுங்காலம் கதிரியக்கக் கனிமங்களை ஆராய்ந்தமையினால் கதிரியக்கத்தின் தீய விளைவுகளுக்கு உள்ளாகிச் சோகை நோயால் (Lukemia)மேரி கியூரி 1934ஆம் ஆண்டில் இறந்தார்.

# 23 நாடுகளில் இசை மட்டுமே தேசியகீதம்

★ தைவானைச் சேர்ந்த 'வான்.சங்' எனும் ஆய்வாளர் கண்டுபிடித்துள்ள சிகரெட் சாம்பல் சேகரிக்கும் தட்டு (Ashtray) சிகரெட் சாம்பலைத் தட்டியவுடன், பலமாக, இருமல் ஒலியைக் கிளப்பி, சிகரெட்டால் ஏற்படும் ஆபத்தை எச்சரிக்கின்றது.

★ மிகவும் கறுப்பாக இருக்கும் மைக்கு இந்தியன் இங் (Indian Ink) என்று பெயர். ஆனால் அந்த மை சீனாவிலிருந்து தான் வருகிறது.

★ உலகிலுள்ள 23 நாடுகளில் வெறும் இசை மட்டுமே தேசிய கீதமாகவுள்ளது.

★ "விக்டர் ஹியூகோ" தனது நாவல் ஒன்றில் 93 காற்புள்ளிகளை (கமா) ஒரே வாக்கியத்தில் பயன்படுத்தியுள்ளார்.

★ முதன் முதலில் செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்தான் செலூலயிட் 1884இல் ஜோர்ஜ் ஈஸ்ட்மன் எனும் அமெரிக்கர் இதன் மூலம் போட்டோபிலிம் செய்வதைக் கண்டறிந்தார்.

# வாய்விட்டுச் சிரிக்கும்போது....

"வாய்விட்டுச் சிரியுங்கள்"

இது சிகாகோ - சென்ட் லூக்கஸ் மெடிக்கல் சென்டரின் கண்டுபிடிப்புக்களில் ஒன்று.

உரக்கச் சிரிக்கும் போது உடலில் ஒக்சிசனின் ஓட்டம் அதிகரிக்கின்றது. இதயத்துடிப்பும், இரத்த அழுத்தமும் அதிகரிப்பதோடு, எலும்பு இணைப்புக்களுக்குள் ஒரு குலுக்கல் நடைபெறுகின்றது. இதயம் துடிக்கிறது. உள்ளமும், உடலும் புத்துணர்வு பெற்று புது வேகம் கொள்கின்றது.

உடலியல் கலங்களுக்குள் மருந்தை நுழைப்பதற்கு நிமிடங்கள், மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. நுழையும் மருந்தும் மில்லி மீற்றர், சென்ரிமீற்றர், மீற்றர் தூரத்தை ஆமை வேகத்தில் நகர்ந்தே உடல் பூராவும் பரவுகின்றது.

கணப்பொழுதில் எல்லாக் கலங்களுக்கும் செல்லத்தக்க ஒரே ஒரு கருவி சிரிப்புத்தான்.

உண்மைதான், சிரிக்கும் போது "என்டோர்பின்" எனும் அமிலத்தை உடல் உற்பத்தி செய்து எல்லாப் பாகங்களுக்கும் அனுப்புகின்றது. இதனூடாக உடம்பு வலிகளோடு, பிறநோய்களூடாக ஏற்படுகின்ற வலி குணமடைகின்றது. இதனூடு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.

சிரிப்பிலும் மருத்துவம் மணக்கின்றது. உரக்கச் சிரிக்கும் போது "ரி - லைம் போசைட்ஸ் (T-lymphocytes)" என்ற பொருளின் செயல் திறனும் அதிகரிக்கின்றது. உடல் பாகங்களில் நோய் இருப்பின் நோயைத் தேடி அது காப்பாற்றுகின்றது.

ரி - லைம்போசைட்ஸ் உற்பத்தி குறையும் போதுகார்ட்டினோல் என்ற ஹார்மோன் இரத்தத்தில் அதிகம் கலந்துவிடும். இதனால் நோய் எதிர்ப்புத் தன்மை நமது உடலில் குறைகின்றது.

நோய்கள் விட்டுவிட்டுவரும் போது வாய்விட்டுச் சிரிப்பது நல்லது.

தியானம் செய்வது போல் தினமும் 20 நிமிடங்கள் சிரித்தால் "இம்யுனோ குளோபின் - ஏ" என்ற பொருள் மூக்கிலுள்ள சளியில் அதிகரிக்கும். இதுவே ஒரு நோய் எதிர்ப்புப் பொருளாகும். இதன் போது கடுமையான புற்று நோய் திசுக்கள் கூட மூக்கு வழிநுழைய முடியாது தடுத்துவிடுகின்றது.

உடற்பயிற்சி இரத்தோட்ட வேகத்தை அதிகரிக்கின்றது. அதேபோல் உரக்கச் சிரித்தாலும் இரத்தோட்ட வேகம் அதிகரிக்கும். எனவே தவணை முறையில் சிரியாதீர்கள் தம்மை மறந்து சிரியுங்கள் நோய் உங்களை நெருங்காது என்று சிகாகோ சென்ட் லூக்கஸ் மெடிக்கல் சென்டரின் கண்டுபிடிப்பின் கருத்தாகும்.

# பிக்-பாங்க்

நாம் வாழும் பூமி சூரிய மண்டலத்திலுள்ளது! அதைப்போன்ற மற்றைய மண்டலங்களும் உண்டு. இவையனைத்தும் பிரபஞ்சம் எனப்படுகிறது. அவை நாங்களெல்லாம் உயிர் வாழக்காரணமாகும். இந்தப் பிரபஞ்சம் (Universe) பிறந்தது எப்படி என்று பல்லாண்டு காலமாக ஆராயப்பட்டு வருகிறது. அதில் பண்டைய தமிழர்கள் சிறந்த நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள். ஒளியில் இவ்வுலகம் தோன்றியது பற்றியும், ஆயிரம் தாமரை இதழ் மலர்வது (Layers of Universe) என்றும் பாடியது. ஏறத்தாழ பிரபஞ்ச பெரு வெடிப்பு (Big Bong) பற்றியே உணர்த்துகிறது. ஹைட்ரிஜன், ஹீலியம் அணுக்கள் வெடித்த ஒரு நிலையே பெரு வெடிப்பு எனப்படுகிறது. இதிலிருந்தே, கோடானுகோடி நட்சத்திரங்களும், சூரிய மண்டலமாகிய பிரபஞ்சமும் தோன்றியது, விண் வெளியில் சுற்றிவரும் சில விண்கற்களை ஆராயும் போது அவை 4,600 மில்லியன் வருடங்களானது என அறிய முடிகிறது. இதில் ஹைட்ரிஜன்,ஹீலியம் இன்றளவும் காணப்படுவதால் பெரு வெடிப்பிற்கு காரணம் கூறப்படுகிறது. (Big Bong) எனும் பெரு வெடிப்பில் பிறந்த சூரிய மண்டலத்தில் அடங்கிய பூமியில் சூரியனின் கதிர்கள் வந்தடைய (சுமார்(150) மில்லியன் கி.மீ) 8 நிமிடம் 20 விநாடிகளாகின்றன.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு.

## (வடக்கு-கிழக்கு மாகாணசபை)

## வடக்கு — கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல. 1846-SRI(SF)

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்(NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும்(NECORD),கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொ. இல | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம்(ரூபா) | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | கிளி/நிகொட்/சடி/06 | பளை றோ.க.த.க.பாடசாலையில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 02 | கிளி/நிகொட்/சடி/07 | புன்னை நீராவி அ.த.க.பாடசாலையில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 03 | கிளி/நிகொட்/சடி/08 | கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில்110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 04 | கிளி/நிகொட்/சடி/09 | பளை மத்திய கல்லூரியில் இரண்டு 120'x25' வகுப்பறைக் கட்டடங்களும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 52000 |
| 05 | கிளி/நிகொட்/சடி/10 | கிளிநொச்சி /புனித பற்றிமா றோ.க.த.க.பாடசாலையில்110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 06 | கிளி/நிகொட்/சடி/11 | பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25'கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 07 | கிளி/நிகொட்/சடி/12 | பூநகரி மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 08 | கிளி/நிகொட்/சடி/13 | பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'x25' கட்டடமும் நிர்மாணம். | 1000 | எம் 6 | 53000 |
| 09 | கிளி/நிகொட்/ ஆர்டி/03 | வன்னேரிக்குளம்-பண்டிவெட்டி பால நிர்மாணம். | 1000 | எம் 7 | 40000 |
| 10. | கிளி/நிகொட்/ஏஜி/01 | பளை கமநல கேந்திர நிலைய மீள் நிர்மாணம். | 1000 | எம் 7 | 35000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளன.

i. நிர்மாணப்பயிற்சி,அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரவுபடுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

iii இங்பாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

iv மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

v கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்துக் கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 2003 மார்ச் 31ந் திகதியிலிருந்து ஏப்பிரல் 11ந் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு i வாசகம் ii குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2003 ஏப்பிரல் மாதம் 22 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று ஏப்பிரல் 09ந் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்**
தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.

(சி.804)



**சிந்தனைக்கு**

மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூகச் சீரமைப்புக்களே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-03-2003

## நெருக்கடியிலிருந்து மீள!

எதிர்பார்க்கப்பட்டது போன்றே வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போரானது இனப்பிரச்சினை குறித்த விடயத்தில் இருந்து பெரும்பாலானோரின் கவனத்தைத் திசைதிருப்பியுள்ளது. அதாவது, ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் குறித்த விடயமே இன்று சர்வதேச ரீதியில் முதன்மையான விடயமாக – முழு அளவில் கவனத்தைக் கவர்ந்துள்ள விடயமாகியுள்ளது.

வளைகுடாவில் யுத்தமொன்று மூளுமாக இருப்பின் சர்வதேசத்தின் கவனம் முழு அளவில் அங்கேயே ஈர்க்கப்படும் என ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முக்கிய பங்காற்றிவரும் நோர்வேயும், ஜப்பானும் எச்சரித்தே வந்துள்ளன. ஆனால், இவ்விரு நாடுகளும் இவ்விடயத்தில் தமது அக்கறைகளைக் குறைத்துக் கொண்டுவிட்டதாகக் கூறுவதற்கில்லை.

எடுத்துக்காட்டாக, ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டமையால் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து நிதி கிடைப்பதில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு நோர்வே அரசு மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களை சிறிலங்காவிற்கு வழங்கியுள்ளது. அதாவது, சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதி உதவியினை சர்வதேச மட்டத்தில் ஊக்குவிக்கும் வகையில் இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், சிறிலங்காவைப் பொறுத்து இவ்யுத்தமானது கிடைக்கப்பெறக் கூடிய நிதியுதவியைப் பாதிக்கக்கூடியதாக மட்டுமல்ல, சிறிலங்காவின் வருமானத்திலும் பெரும் பாதிப்பை விளைவிக்கக்கூடியதுமாகும். குறிப்பாக, சிறிலங்காவின் தேயிலை வர்த்தகம், மத்திய கிழக்கில் தொழில்புரியும் இலங்கையரிடம் இருந்து கிடைக்கும் வருமானம், உல்லாசப் பயணத்துறை உட்பட பல்வேறு வழிகளில் சிறிலங்காவின் வருமானம் பாதிப்புக்களை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

சிறிலங்கா அரசைப் பொறுத்து அது ஏற்கனவே பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்றதென்பது வெளிப்படையானது. யப்பானில் யூனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கிடைக்கப்பெறும் நிதி உதவிகளையே அது பெரும்பாலும் எதிர்பார்த்துள்ளது. இந்நிலையில், உதவி கிடைக்கப்பெறுவது தாமதப்பட்டாலோ அன்றி எதிர்பார்க்கப்படும் உதவி கிடைக்கப்பெறாது போனாலோ சிறிலங்கா அரசாங்கம் செயற்படுவதென்பது இயலாதுபோய்விடக்கூடும்.

தற்பொழுதே விலைவாசி ஏற்றம் பற்றி ரணில் அரசாங்கத்தின் மீது பலத்த கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. விலைவாசி ஏற்றத்தினை மையமாக வைத்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ள அதேவேளை, வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பிற்கு ஏற்ப சம்பள உயர்வு கோரி, தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்த முஸ்தீப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

இதேசமயம், விலைவாசி ஏற்றமானது மக்களைப் பாதித்துள்ளமையும், அவர்களின் கவனத்தைத் திசை திருப்பியுள்ளமையும் சில கருத்துக்கணிப்புகள் மூலம் தெரியவும் வந்துள்ளது. அதாவது, கடந்த வருடத்தினைப்போல் அல்லது தற்பொழுது ரணில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள், மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு மக்கள் மத்தியிலான ஆதரவில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகின்றது.

அதாவது, மக்களின் கவனமானது சமாதான முயற்சிகளில் இருந்து படிப்படியாக விடுபட்டு, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை போன்றவற்றில் செல்ல ஆரம்பித்துள்ளது. குறிப்பாக விலைவாசி ஏற்றம் போன்ற விடயங்களில் அவர்களின் கவனம் திசைதிரும்பத் தொடங்கியுள்ளது. இது ஒன்றும் எதிர்பார்க்கப்பட முடியாத விடயமும் அல்ல.

இதனால், சமாதான முயற்சிகளின் எதிர்காலமே கேள்விக்குரியதாகிவிடுமோ என்ற சந்தேகங்களும் எழத் தொடங்கியுள்ளன. அதிலும் குறிப்பாக விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதோடு, அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படாத விடத்து அரசாங்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வருவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஏற்கனவே, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்துவிடுவதற்கு காத்திருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க – அரசாங்கத்திற்கு ஒரு நெருக்கடி வரும் பட்சத்தில் அதனைச் சாட்டாக வைத்து அதனைக் கலைத்து விடுவதற்குத் தயங்கமாட்டார். ஆகையினால், இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளும் சரி, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் சரி, தப்பிப்பிழைப்பதற்குச் சர்வதேச சமூகத்தின் உதவி அவசியமாகும். அதாவது, வளைகுடா நெருக்கடியையும் தாண்டி இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் காட்டும் அக்கறையே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

### திருமலை திரியாய் பகுதியில்
# மீளக்குடியேறும் மக்களுக்கான குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டல்

(திருமலை)

திருகோணமலை திரியாய் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சென்று மீண்டும் அப்பகுதியில் குடியேறியுள்ள மக்களுக்கான குடியிருப்புக்களுக்குரிய அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இந்தக் குடியிருப்புக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், திருமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் துரை ரட்ணசிங்கம், திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அத்திவாரக்கற்களை நாட்டி வைத்தனர்.

திரியாய், கட்டுக்குளம் பகுதியில் முதலாவது வீட்டுக்கான அத்திவாரக் கல்லினை பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் நாட்டி வைத்தார். (25)

# தொண்டராசிரியர் போராட்டத்திற்கு சிறிலங்காப் பொலிசார் இடையூறு

(மன்னார்)

மன்னாரில் தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

மன்னார் வலயக் கல்வி அலுவலகம் முன் கூடிய தொண்டராசிரியர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகள் முற்றாகச் செயலிழந்தன.

இதேவேளை, அவ்விடத்திற்குச் சென்ற சிறிலங்காப் பொலிசார் அவர்களை போராட்டத்தில் இருந்து விலகிக்கொள்ளுமாறும் அல்லது கைது செய்து தடுத்து வைக்கப்படுவீர்கள் எனவும் எச்சரித்தனர்.

ஆயினும். இந்த அச்சுறுத்தலுக்கு அடிபணியாது இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

மாலை போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் சென்று இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதாக வாக்குறுதியளித்தனர். (மி)

## தமிழ்ச் சங்க கூட்டம்

கிளிநொச்சித் தமிழ்ச் சங்கத்தின் மாதாந்த செயலாண்மைக்குழுக் கூட்டம் இன்று மு.ப.9.00 மணிக்கு கிளிநொச்சி யோகர்சுவாமிகள் திருவடி நிலைய மண்டபத்தில் நடைபெறும். செயலாண்மைக்குழுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு முனைவர் பொற்கோ எழுதிய 'தமிழ் வளர்ச்சி' பேராசிரியர் திரு.க. அன்பழகன் எழுதிய 'தமிழர் திருமணமும், தமிழர் இனமானமும்' என்ற நூலில் இருந்து 'விவேகானந்தரும், புரோகிதமும்' ஆகிய கட்டுரைகளும் வாசிக்கப் பெறும். இதைத் தொடர்ந்து செயலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும். (சோ)

### மத்திய கிழக்கில் தொழில்புரிவோரின்
## விபரங்களைப் பதிவு செய்ய முல்லை. அரச அதிபர் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வதிபவர்களின் உறவினர்கள் யாராவது மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்தால் அல்லது வசித்துவந்தால் அவர்களது பெயர் விபரங்களைத் தங்கள் பிரிவு பிரதேச செயலர்கள்/ உதவி அரசாங்க அதிபர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். தேவையேற்படின் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான நிலவரங்களை அறிந்து கொள்வதற்கு இப்பதிவு மிகவும் முக்கியமானதால் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி சம்பந்தப்பட்டவர்கள் கேட்கப்படுகின்றனர். (சோ)

# முல்லை மாவட்ட ஊர்திகளை பதிவுசெய்யக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சகல மோட்டார் வாகன உரிமையாளர்களையும் தமது வாகன விபரங்களை தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர் மூலமாக உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பதிவுசெய்து, அதற்கான அத்தாட்சிக் கடிதத்தைப் பெறுமாறு மோட்டார் வாகன உரிமையாளர்களை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் கேட்டுக் கொள்கின்றார்.

எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்கு இந்த நடவடிக்கை மிக அவசியமானதால் பதிவுகளைத் தாமதமின்றி செய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன் முன்னர் பதிவு செய்தவர்களும் பதிவு செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சோ)

### ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்
## புதிய பிரதேசசபை உருவாக்கல்

புதிய பிரதேசசபை ஒன்று 'ஒட்டுசுட்டான்' பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்படுத்துவதற்கான கருத்துக் கணிப்பு என்னால் பொதுமக்களிடமும், பிரதேசத்தின் அமைப்புக்களிடமும், மேலும் அவசியமெனக் கருதப்படும் ஆட்களிடமும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இது விடயமாக இன்று காலை 10.00 மணிக்கு கற்சிலைமடு மகா வித்தியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதால் பொது அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள், ஒட்டுசுட்டான் வாழ் பெரியோர்கள் இக்கலந்துரையாடலில் தவறாது சமுகமளித்துத் தங்களின் கருத்துக்களை வழங்கும்படி முல்லை மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.

## வன்னி விளையாட்டுத்துறையினர் நடாத்தும் மாபெரும் வீதியோட்டம்

(அலுவலக செய்தியாளர்)

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 14-04-2003 திங்கட்கிழமை மாபெரும் வீதியோட்ட நிகழ்வு தமிழீழ விளையாட்டுத்துறையின் வன்னி மாவட்ட செயலகத்தினரால் நடாத்தப்படவுள்ளது. வீதியோட்ட நிகழ்வு மாங்குளத்தில் ஆரம்பமாகி கிளி மத்திய மைதானத்தை வந்தடையவுள்ளது. இப்போட்டியில் வெற்றியீட்டும் மூன்று போட்டியாளர்களுக்கு சிறந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் போட்டியாளர்கள் பங்கு கொள்ளலாம் எனவும், பங்கு கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 10-04-2003க்கு முன்னதாக வன்னி மாவட்ட செயலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

## கலந்துரையாடல்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தமிழீழ சட்டக்கல்லூரி 4 ஆம் அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் தமிழீழ சட்டக் கல்லூரி தருமலர் மண்டபத்தில் நடைபெறும் என சட்டக்கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

## அனுமதி பெறவும்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேசத்திலுள்ள பகுதிகளில் மண் ஏற்றுபவர்கள் கரைச்சிப்பிரதேச சபையின் முன் அனுமதியினைப் பெற்று மண் ஏற்றும் வண்ணம் கரைச்சிப்பிரதேச சபையினர் வேண்டியுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் அனுமதியின்றி மண் ஏற்றப்படுவது கண்டுபிடிக்குமிடத்து சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ரூபா 500 தண்டப்பணமாக அறவிடப்படுமென கிளி.கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார். (சோ)

# வடக்கு - கிழக்கு கல்வி நலன் கருதி தொ. ஆசிரியர்களை நிரந்தரமாக்குக!

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதமருக்கு மகஜர்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் சிறிலங்காவின் பிரதம மந்திரிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கு மாகாண பள்ளிகளில் சுமார் 6200 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நீக்கப்படாது உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையினால் ஏற் படும் கல்விப் பாதிப்புக்களை ஈடுசெய்யும் முகமாகவே காலத்துக்குக் காலம் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத தொண்டர் ஆசிரியர்கள், அகிம்சைப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இதனால் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் இடம் பெறாமையினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆசிரியர்கள் உள்ள பள்ளிகள் பல மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி நலன் கருதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் வன்னி மாவட்டக் கிளையும் பிரதம மந்திரிக்கு இது தொடர்பாக மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

# முன்னணி நிலையிலுள்ள போராளிகளுடன் நாடகக் கலைஞர்களின் பாசறை

(அலுவலக செய்தியாளர்)

முன்னணி நிலையிலுள்ள போராளிகளுடனான கொள்கை முன்னெடுப்பு பிரிவைச் சேர்ந்த நாடகக் கலைஞர்களின் மாதாந்த கலைஞர் பாசறை நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

எண்பத்து மூன்று ஆண், பெண் கலைஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கடந்த புதன், வியாழன் ஆகிய இரு நாட்களும் பகல் பொழுது முழுவதும் போராளிகளின் இருப்பிடங்களைச் சீரமைக்கும் பணியில் கலைஞர்களும், போராளிகளும் மிகவும் உற்சாகமாக ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை இரவு கலைஞர் பாசறை நிகழ்வில் வட முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்களும் மற்றும் தளபதிகளும் போராளிகளும் கலந்து கொண்டனர்.

### - வட-கிழக்கு மாகாணத்தில் -

# அனைத்து அரச செயலகங்களிலும் சிங்கக்கொடி ஏற்ற உத்தரவு

(அலுவலக செய்தியாளர்)

வட- கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரச செயலகங்களிலும் கடமை நாட்களில் சிங்கக் கொடி ஏற்றப்படவேண்டுமென உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் சுற்றறிக்கை ஒன்றை கடந்த 26ஆம் திகதி சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வட- கிழக்கு பிரதேசங்களிலுள்ள அரச திணைக்களங்கள் யாவற்றிலும் காலை கடமை நேரம் 9.00மணிக்கு சிறிலங்கா தேசியக் கொடி (சிங்கக்கொடி) ஏற்றப்பட்டு மாலையில் மேற்படி கொடி இறக்கப்படவேண்டுமென இச் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களுக்கு தனிச்சிங்களத்தில் மேற்படி சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், நேற்று 27ஆம் திகதி முதல் இவ்வாறு திணைக்களங்களில்கொடி ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சோ.லோ)

### - யாழ்.நகரின் மத்தியில் -

# படைமுகாம் நிறுவலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி

யாழ்ப்பாண நகரின் மத்தியில் படைமுகாமை நிறுவ சிறிலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் முயற்சியைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது அமைப்புக்கள் ஆலோசித்து வருகின்றன.

படைத்தளம் நிறுவும் வேலைகளை இடைநிறுத்தக் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவும் பொதுஅமைப்புக்கள் உத்தேசித்துள்ளன.

# உள்ளூராட்சித் தேர்தலில் மு.கா.தனித்துப் போட்டி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார். வடக்கு- கிழக்கில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர் வரும் யூன் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தேர்தல் நடத்தப்படுமானால் முஸ்லிங்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் எனத் தெரியவருகிறது.

## புலிகளின்...

பான கருத்தரங்கிலும் மனித உரிமைகள், மனிதாபிமான உதவிகள், ஜனநாயகம் தொடர்பான கருத்தரங்கிலும் கலந்து கொள்வார். (பா)

## வேவு விமானம்...

நேற்றுக் காலை 10 மணி முதல் 10.30 மணி வரை இவ் விமானம் பல தடவைகள் வான்பரப்பில் வட்டமிட்டதையும், இதனை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் அவதானித்ததையும் காண முடிந்தது.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்திவருகின்றது. (பா)

## புலிகளுக்கு...

அல்லது அரசு அல்லாத வேறு ஆயுதக்குழு இச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இது அமைதி வழிமுறைக்கு ஆபத்தான ஒன்று எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கண்காணிப்புக்குழு தயாரித்துள்ள விசாரணை அறிக்கையின் பிரதிகள் சிறிலங்கா அரசின் சமாதான நடவடிக்கை இணைப்புச் செயலகத்திடமும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சீன மீன்பிடி இழுவைப் படகு நிறைவேற்றுச்சபையின் அனுமதியோடு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்ததை குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ் கலையரங்கு

புலிகளின்குரலின் புதுக் குடியிருப்பு பிரதேச வானொலி மன்றம் நடாத்தும் மாதாந்த முத் தமிழ் கலையரங்கு இன்று இரவு 7.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறையினரின் ஆதரவில் மேற்படி நிகழ்வு நடைபெறுகின்றது.

## தமிழ்ச்செல்வன்...

கேணல் கருணா நேற்று மட்டக்களப்பிற்குத் திரும்பினார்.

காலை 9.30 மணிக்கு சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் பழுகாமம் கண்டுமணி வித்தியாலய மைதானத்தில் வந்திறங்கினார்.

இவர்களை விடுதலைப் புலிகளின் தளபதிகளும், போராளிகளும் வரவேற்றனர். (சோ.லோ)

## ம.நே.சு...

மி.மீற்றர் எறிகணை 16, 122 மி.மீற்றர் எறிகணை எச்.ஈ 03, 152 மி.மீற்றர் 03, ரீ.6.9 ஜம்பிங் 16, கைக்குண்டுகள் 72, 76 மி.மீற்றர் எறிகணை 01, ஆர்.பி.ஜி 1.07, துப்பாக்கி கிறனைட் 13, 40 மி.மீற்றர் எறிகணை 04, அலெட் பரா 01, பியூஸ் 70, 106 மி.மீற்றர் எறிகணை 02, 85 மி.மீற்றர் எறிகணை 02, வெடி மருந்து 01 கிலோ வெடிக்கவைக்கும் (கெற்ப) கருவி 10, ஆகியன வெடிக்கும் நிலையில் இருந்த வெடிபொருட்கள் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் தகர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

### - இல. உதவும் நாடுகளின் மாநாட்டில் -

# நான்காவது பங்காளியான ஐரோ. யூனியன் இணைவு!

எதிர்வரும் யூன் மாதம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் நான்காவது பங்காளி அமைப்பாக இணைவதற்கு ஐரோப்பிய யூனியன் இணங்கியுள்ளது.

சமாதான முன்னெடுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இந்தச் செய்தியானது ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் உதவி கிடைக்கவுள்ளதை எடுத்துக்காட்டுவதாக அரச ஊடகத்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான மேலதிகாரியும், வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளரும் இந்த முடிவை எடுத்ததாகவும் இது குறித்து இலங்கை அரசுக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களில் ஐரோப்பிய ஒன்றியம் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டுள்ளதாகவும், சமாதான நடவடிக்கைகள் குறித்து தீவிர ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இத்தீர்மானத்தின்படி இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாடு, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கூட்டுத் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஜப்பானில் எதிர்வரும் ஜூன் 9,10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்கு முன்னோடியாக வெளிநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இரண்டு ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

முதலாவது ஆலோசனைக் கூட்டம் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் தலைமையில் ஏப்ரல் 14ம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இலங்கை மக்களின் தேவைகள் குறித்து, அமைச்சர் மிலிந்த மொறகொட விளக்குவார் எனவும் இரண்டாவது கூட்டம் மே 6ம் திகதி கொழும்பில் நடைபெறும் எனவும் இதில் டோக்கியோ மாநாட்டுக்கான இறுதி ஏற்பாடு உறுதிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கில்...

கள் மூலம் பாரசீக வளைகுடாவில் தரித்துள்ள விமானத் தாங்கிக் கப்பல்களில் இருந்து விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டுவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாக்தாத் மீது 4600 றாத்தல் (2086 கிலோ) எடையுள்ள குண்டுகளை அமெரிக்க விமானங்கள் வீசியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பதுங்கு குழிகளை இலக்கு வைத்து வியாழக்கிழமை நள்ளிரவில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை யூப்பிரட்டிஷ் நதி பள்ளத்தாக்கின் வழியே சண்டைகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும், குறிப்பாக நதி கடக்கின்ற நஸ்ரியா, நஜாப், சமாவா பகுதிகளில் சண்டைகள் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலைவனப்புயல் ஓய்ந்திருக்கும் இந்நேரத்தில் கூட்டுப்படையினரின் வான்படைப் பலம், திறனும் அதிகரிக்கப்பட்டுள்ளது.தைப்பிரிஸ் நதிப் பள்ளத்தாக்கில் அல்- குற் என்னும் நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் படையினர் மிகக் கடுமையான எதிர்ப்பை சந்தித்துக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. வடக்கு ஈராக்கில் பரசூட் மூலம் தரையிறங்கியுள்ள அமெரிக்க படையினர் புதிய முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கின் எண்ணெய்வள தலைநகராக கருதப்படும் திர்ப்புக் அருகே உள்ள முக்கிய தளத்தில் ஈராக் எதிர்ப்பு குர்தீஷ் படையினர் கைப்பற்றிவிட்டதான செய்திகளை ஈராக் மறுத்துள்ளது.

இது இவ்வாறு இருக்க அமெரிக்கா தனது படையினரை இரு மடங்குக்கு, மேல் அதிகரிக்கும் என்று பெண்டகன் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்தி வரும் போரில் எதிர்பாராத வகையில் ஈராக் துணை ராணுவத்தினர் காட்டும் எதிர்ப்பு இந்தப் போரானது, முன்னர் கணித்திருந்ததை விட நீண்ட காலம் நடக்கக்கூடும் என ஈராக்கில் இருக்கும் அமெரிக்க படைகளின் தலைமைத் தளபதி லெப். ஜெனரல் வில்லியம் வோலஸ் தெரிவித்துள்ளார்.

பாக்தாத் நகரைக் கைப்பற்றுவதற்கு முன்னர் பாக்தாத் நகரம் முதலில் தனிமைப் படுத்தப்பட வேண்டும் என்றும் இது தாமதமாகலாம் என்றும் அமெரிக்க பாதுகாப்பு துறைச் செயலர் டோனால்ட் ரம்ஸ் வேல்ட் தெரிவித்துள்ளார்.

இதில் ராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தப்புக் கணக்கு போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.